தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர்
கலை இதழ்

வாழ்க்கை பொது.

வானமென்னும் கூரையின்கீழ்
வந்துருளும் மண்ணுலகம்!
வந்துருளும் மண்ணுலகில்
தம்பியே தம்பி—நாம்
வாழுகின்ற மக்களடா
தம்பியே தம்பி!

மக்களெனும் பேரினத்தில்
மகிழ்ந்திருப்பார் சிற்சிலபேர்!
மகிழ்ந்திருக்கும் அவரடிக்கீழ்
தம்பியே தம்பி—பலர்
மாளுவதும் கொடுமையன்றோ
தம்பியே தம்பி!

மழைபொழிந்து பயிராகும்!
மலைபோலும் நெல்விளையும்!
மழையும் பயிர்விளைவும்
தம்பியே தம்பி—எல்லா
மக்களுக்கும் பொதுவன்றோ
தம்பியே தம்பி!

உலகிருக்கும் மக்களெலாம்
உழைத்துணத்தான் வேண்டுமெனில்
உழைப்பறியார் வாழுவதோ
தம்பியே தம்பி—பலர்
உடல்வருந்தித் தாழுவதோ
தம்பியே தம்பி!

மாந்தருக்குள் வேற்றுமைகள்!
மனம்வளரா நாகரிகம்!
மனம்வளரா நிலையில் அது
தம்பியே தம்பி—வெறும்
மணல்மேடு போன்றதடா
தம்பியே தம்பி!

குரல்: 3.
இசை: 11, 12

விலை
20 காசு

மாட்டு வண்டி!

கட்டுச் சோற்றைக் கட்டினர்.
காளை மாட்டைப் பூட்டினர்.
எட்டுக் கற்கள் போகவே,
ஏழு மணியை ஓட்டினர்!

ஒற்றை மாட்டு வண்டியாம்!
ஊர்ந்து போகும் வண்டியாம்!
நத்தை போல மெல்லமாய்,
நகர்ந்து போகும் வண்டியாம்!

தாத்தா ஏறிப் போனதாம்;
'தடக்குப் புடக்கு' வண்டியாம்!
கூத்துப் பார்க்கப் போகவே
குடும்பம் போன வண்டியாம்!

கற்கள் நிறைந்த தடத்திலும்,
காட்டுப் பாதை, மணலிலும்,
முட்கள் சேர்ந்த வழியிலும்
முனைந்து போகும் வண்டியாம்!

அரிசி, உப்பு மூட்டைகள்,
அடுக்கு சட்டி, பானைகள்
உரசிக் கொண்டு இராப் பகல்
ஊர்ந்து போகும் வண்டியாம்!

இரும்புப் பட்டை சுற்றிய
இரண்டு பெரிய சக்கரம்!
பிரம்பு, மூங்கில் பின்னிய
பெரிய கூடு மேற்புறம்!

மொட்டை யான வண்டிகள்!
முடுக்க மான எருதுகள்!
கட்டை தூக்கிப் போய்வரும்!
கரும்புக் கட்டும் மேல்வரும்!

வைக்கோல் போரும் ஏற்றிடும்!
வண்டல் மணலும் நிரப்பிடும்!
கைக்கோல் ஒன்று வேண்டுமே;
காளை தம்மை விரட்டவே!

-துரை-மாணிக்கம்-

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்-3 | தி. பி. ௨௦௦௦-சூன்-சூலை-ஆகச்டு-69 | இசை-11, 12.

வீட்டு நூலகம்-1

உன் பழைய பாடப் பொத்தகங்களை யெல்லாம் என்ன செய்தாய் தம்பி; பழைய தாள் வாங்குபவனுக்குப் போட்டாயா? இல்லை; பலசரக்குக் கடைக்குப் போயிற்று? கிழியாத, நல்ல பொத்தகங்களாய் இருந்திருந்தால் அவற்றைப் பாதிவிலைக்கு விற்றிருப்பாய். விலைக்குப் போகாதபடி அவை கிழிந்திருத்தாலோ, அழுக்காக இருந்தாலோ அவற்றை மூலையில் எறிந்திருப்பாய்! இல்லையானால் விற்றிருப்பாய். அப்படித்தானே! தம்பி! நீ மட்டும் இல்லை; நம் நாட்டில் உன்னைப்போல் பல்லாயிரக் கணக்கான தம்பி தங்கைகளும் தங்கள் முந்தைய ஆண்டுப் பொத்தகங்களை அப்படித்தான் கருதி விடுகின்றனர். இப்பழக்கமோ, முறையோ நல்லதில்லை. நீ எழுதித்தீர்த்த எழுதுசுவடிகளையும் குறிப்புச் சுவடிகளையும் பழையதாள் வாங்குபவனிடம் போடுவதில் பிழையில்லை. பொத்தகங்களை அவ்வாறு செய்வதுதான் பிழை.

நீ படித்த முந்தைய ஆண்டுப் பொத்தகங்கள் பலவகை. அவற்றில் சில வரலாறுகளாக விருக்கும்; சில கதைகளாக இருக்கும். கணக்குப் பொத்தகங்களைப் போன்ற ஒருசிலதாம் அந்தந்த வகுப்பிற்கான பாடப் பொத்தகங்களாக இருக்கும். அவற்றை நீ உனக்குப்பின் படிக்க வருகின்ற மாணவர்களுக்கு விற்றுவிடலாம். ஆனால் நீ படித்த

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்,
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

வரலாற்றுப் பொத்தகங்களையும் கதைப் பொத்தகங்களையும் விற்று விடாதே! அவற்றை ஒழுங்காக மேலுறை இட்டு ஒரு பேழையிலோ பெட்டியிலோ சேர்த்துக்கொண்டு வா. இவற்றுடன் நீ படிக்கும் பிற அறிவுப் பொத்தகங்களையும் சேர்த்துத் தொகுத்துவை. உன் கைககளில் அவ்வப்பொழுது சிறுசிறு காசுகள் வந்து சேரும் இல்லையா? அவற்றையும் ஓர் உண்டிலில் போட்டுச் சேர்த்துவா. அவை ஒரு கணிசமான தொகையாக ஆனபின், வீட்டிலுள்ள பெரியவர்களையோ உன் பள்ளி ஆசிரியர்களையோ கேட்டு அவர்கள் கூறும் சிறந்த அறிவுப் பொத்தகங்களையும் வாங்கிப் படித்துவிட்டுப் பேணிவை. இப்படியே நீ செய்து வந்தாயானால் ஓர் ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளுக்குப்பின் உன்னிடம் சிறிய ஒரு நூலகம் அமைந்து விடும்.

நூலகம் இல்லாத வீட்டைப் பாழகம் என்று எண்ணிக்கொள். நம் வீடுகளில் நெல்லைச் சேர்த்து வைக்கக் குதிர் உண்டு. வீட்டுப் பண்டங்களைச் சேர்த்து வைக்கச் சரக்கறை உண்டு, அம்மாவிடம் போய்க் கேள். நம் உணவுக்காகப் பலப்பல பண்டங்களைச் சேர்த்து வைத்திருப்பதை அவர்கள் உனக்குக் காட்டுவார்கள். பணத்தைக்கூட எல்லாரும் சேர்த்துத்தானே வைக்கிறார்கள். ஆனால் அறிவுச் செல்வத்தைச் சேர்க்க வேண்டும் என்று நினைப்பவர்கள் மிகவும் குறைவு.

நம் நாடு உலகில் உள்ள பிற நாடுகளைவிட எல்லா வகையிலும் பின் தங்கி இருப்பதற்கு என்ன காரணம் தெரியுமா தம்பி! நாம் உண்பதிலும், உடுப்பதிலும், பொழுது போக்குவதிலும் செலுத்தும் கவனங்களைவிட அறிவை வளர்த்துக்கொள்வதில் குறைவான கவனம் செலுத்துபவர்களாக இருப்பதுதான்.

தம்பி! ஒவ்வொரு வீட்டிலும் நூலகம் இருக்க வேண்டும். நூல்கள் பலதரப்பட்டவையாதலால் அறிவையும் மனத்தையும் வளர்த்துக் கொள்ளும் நல்ல நூல்களையே நாம் வாங்குதல் வேண்டும். வெறும் கதைப் பொத்தகங்களே நமக்குப் போதா. நம் நாட்டில் உள்ள கதை நூல்களைப்போல் வேறெந்த நாட்டிலும் இல்லை. பொய்க் கதைகளும், மூடநம்பிக்கையூட்டும் பழமைக் கதைகளும், அவ்வப்பொழுதைக்குப் பொழுதுபோக்கிற்கு உதவும். மற்றபடி அவற்றால் நம் அறிவு வளர்ச்சியுறாது; முடங்கிப்போகும்.

எனவே நல்ல, உயர்ந்த, அறிவூட்டும் பொத்தகங்களையே நீங்கள் படிக்கவும் வேண்டும்; படித்துக் காக்கவும் வேண்டும். நம் வீட்டிலுள்ள நூலகத்தை நாம் அடிக்கடி பயன்படுத்திக் கொள்ள முடியும். நாம் வாங்க முடியாத விலையுயர்ந்த நூல்களை வேண்டுமானால் பொது நூலகங்களில் போய்ப் படித்துக்கொள்ளலாம். சேர்த்து வைத்த தின்பண்டங்களை நாம் தின்னத் துடிப்பதில்லையா? அப்படித்தான் நம் வீட்டில் உள்ள நூலகத்தைப் பார்க்கின்ற பொழுதெல்லாம் நமக்குப் படிக்க வேண்டும் என்ற எண்ணம் பிறக்கும். ஆகவே வீட்டு நூலகம் மிகவும் தேவையான ஒன்று. இதைப்பற்றி இன்னும் சில செய்திகளை அடுத்த இதழில் எழுதுகின்றேன்.

-பெருஞ்சித்திரன்

கழுதை அழுத கதை

துரை-மாணிக்கம்

காளையண்ணன் முன்னும்
கழுதையம்மை பின்னுமாய்த்
தோளுயர்த்திப் போகவே
குட்டி தொடர்ந்தோடும்!

மக்கள் புதைகாட்டில்
மண்ணிட்ட மேடுகளும்
மிக்குயர்ந்து நின்ற
நெடுமரங்க ளும்கடந்தே,

ஆற்றோரம் தாண்டி,
அழகாய்ச் சிலிர்த்தோடும்
ஊற்றோரம் வந்துநின்றே
ஊரை இறுதிமுறை

பின்திரும்பிப் பார்த்துக்
கழுதையம்மை பேசிற்றே!

என்பிறந்த ஊரிதனை
இன்னும் சிறுபொழுது
கண்ணாரப் பார்க்கின்றேன்;
காத்திருங்கள் அண்ணாவே!
எண்ணாத எண்ணமெல்லாம்
நெஞ்சில் எழுகுதையே!

பாரிலுள்ள மாந்தரிங்குப்
பண்ணும் பிழைகளுக்கே
ஊரென்ன செய்யும்?
உலகந்தான் என்செய்யும்?

இவ்வூரில் தான்பிறந்தேன்!
இவ்வூரில் தான்வளர்ந்தேன்!
இவ்வூரில் தான்என்றன்
இன்கணவர் கைப்பிடித்தேன்!

கைப்பிடித்த நாள்முதலாக்
காட்சியென்ன! மாட்சியென்ன?
மெய்ப்புகழ்ச்சி! மெய்க்களிப்பு!
மீளாத இன்கனவு!

என்கணவர் வேந்தன்!
எழிலரசி நானவர்க்கு!
பொன்னுன வாழ்க்கை!
புதிதுபுதி தாய்இன்பம்!

பாட்டென்ன! ஓட்டமென்ன!
பச்சைப் பசும்புல்மேல்
ஆட்டமென்ன! கூத்தென்ன!
ஆன்ற பெருமையென்ன!

அச்சச்சோ! அவ்வாழ்க்கை
ஆடி அடங்கிற்றே!
மிச்சமிந்தப் பிள்ளைதான்!
மேலுமென்ன வாழ்வெனக்கே?

இங்கிருந்த ஆறும்
இடுகாடும் என்மனத்தில்
மங்காத காட்சிகளாய்
மறவா நினைவுகளாய்த்

தங்கிவரும்; ஆங்கவற்ருல்
தாழ்ச்சியெலாம் வீழ்ச்சியுறும்!
எங்கிருந்த போதிலும்நான்
எண்ணத்தால் வாழ்ந்திருப்பேன்!

ஆனாலும் மக்களென்பார்
ஆட்சிச் செருக்காலே
வீணுன நம்வாழ்வை
வெற்றி பெறச்செய்வோம்!

நாட்டு மாந்தரிடை
நாம்கண்ட கீழ்மைகளைக்
காட்டு விலங்குகள்முன்
கட்டவிழ்த்துக் கூறிடுவோம்!

—என்றுரைத்த வாறாய்
இருகண்ணில் நீர்சொரிய
நின்றிருந்த பெண்கபூதை
நீண்டதொரு துன்பப்பண்
பாடுவது போலப்
பலத்த குரலெடுத்துக்
காடு கிடுகிடுக்கக்
கத்தி அடங்கிற்று!
காம்போதிப் பண்ணின்
கருத்துக் கிசைவதுபோல்
ஆமாமா வென்றே
அடிக்குரலில் காளையண்ணன்
ஒத்திசைத்துப் பாடியதே!
ஓங்கும் குரலிசைபோய்
எத்திசையும் பாய
இருளுலகம் அஞ்சிற்றே! (தொடரும்)

சமசுகிருதத்தில் தமிழ்ச்சொற்கள்-7.

தமிழ்	சமசு (வ. மொ.)	தமிழ்	சமசு (வ. மொ.)
விந்து	பிந்து, விந்து,	ஆசை	ஆசா
விருது (வெற்றிப் பட்டம்)	விருத, பிருத, பிரத	கட்டம்-(துன்பம்)	கஷ்ட
		கப்பி (குரங்கு)	கபி
வில்வம்	பில்வ, வில்வ	கருமம் (தொழில்)	கர்மன்
விழி[வினை] (கண்திற)	வித்	கலியாணம்	கல்யாண
		சோம்பு	சோம
வீசு	வீஜ்		
வீணை	வீணா	நித்தம்	நித்ய
வெஃகு [விரும்பு]	(bh)பிக்ஷ்	பத்தி [அன்பு]	(bh) பக்தி
வேலை [கடல்]	வேலா	பருவம்	பர்வன்
		வானரம் [வாலுள்ள மாந்தன் போன்ற குரங்கு]	வாநர
வேளை [சமயம்]	வேலா		
வைகை [ஓர் ஆறு]	வேகவதீ		

[முற்றும்]

நிலவில் மாந்தர்.

மாந்தர் மூவர் பறந்தனர்;
வானம் நோக்கிச் சென்றனர்.
காந்தப் பரப்பைக் கடந்தனர்;
கவின் நிலாவில் குதித்தனர்!

வியப்பு! வியப்பு! வியப்படா!
வெண்ணிலாவின் கதையடா!
அயர்வி லாத முயற்சிகள்!
அறிவு கண்ட வெற்றிகள்!

எண்ணற் கரிய உடுக்களும்
எல்லை யற்ற வானமும்
கண்ணைக் கருத்தைக் கவர்ந்தன!
கண்டு பிடிக்கத் தூண்டின!

வருந்தி வருந்தி உழைத்தனர்!
வானை அளக்க முனைந்தனர்!
பொருந்தி வந்த அறிவியல்
போட்ட கணக்கும் வென்றதே!

மக்கள் வாழும் உலகம்போல்
மற்ற உலகம் தேடினர்!
தக்க வாறு நிலவினைத்
தாவிக் கண்டு மீண்டனர்!

மானென் றிருக்கும் காட்சிபோல்
மக்கள் பார்த்த நிலவிலே
ஆனை விழுந்த பள்ளம்போல்
அகன்ற குழிகள் கண்டனர்!

குதித்து நடந்து சென்றனர்;
குனிந்து நிமிர்ந்து பார்த்தனர்;
புதிய தரையில் உலவினர்!
புகைப் படங்கள் பிடித்தனர்!

காற்றி லாத பைகளில்
கல்லும் மண்ணும் நிரப்பினர்!
வேற்றோர் உலகத் தரையிலே
வெற்றிக் கொடியை நாட்டினர்!

நிலவுத் தரையில் நின்று, நாம்
நிற்கும் உலகைப் பார்த்தனர்!
குலவும் அழகைச் சுவைத்தனர்!
கோடி விண்மீன் கண்டனர்!

பாட்டன் கால நிலவுதான்;
பாட்டி சொன்ன கதைகள்தாம்!
வீட்டு வாயிற் படியிலே
வெளிச்சம் தந்த நிலவுதான்!

ஆற்று மணலில் நாமெல்லாம்
ஆடிக் களித்த நிலவுதான்!
சோற்றை ஊட்டும் அன்னையார்
சொல்லி அழைத்த நிலவுதான்!

காற்றும் நீரும் அங்கிலை!
கடலும் மலையும் அங்கிலை!
பீற்றைப் புல்லும் அங்கிலை!
பிழைக்கும் உயிரும் அங்கிலை!

வானில் பறந்த மூவரும்
வந்து கடலில் குதித்தனர்!
நானும் நீயும் இருக்கிறோம்;
நாட்டுக் கென்ன செய்கிறோம்?

-பெருஞ்சித்திரன்.

தமிழ்ச்சிட்டு, கடலூர்-1

(தனித்தமிழ் சிறுவர் கலையிதழ்)

மாற்றப்பட்ட உறுப்பினர் கட்டணங்கள்.

	உள்நாடு.	வெளிநாடு, கொழும்பு.
ஆண்டுக்கட்டணம் உருபா	2-50	4-00
தனியிதழ் ,,	0-20	0-30

(அரையாண்டுக் கட்டணம் இல்லை)

ஓரிதழுக்கு 40 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

ஒருமணி நேரத்தில்.....

"தனிமுதல்வன்"

[ஒருமணி நேரந்தான். ஆனால் ஓரிரு நிமையங்களில் படித்து விடலாம்.]

1. கொசு ஒரு மணி நேரத்தில் 6,84,000 முறை தன் சிறகுகளை அடித்துக் கொள்கின்றது.

2. நமது உடலில் உள்ள குருதி அணு உடம்பை 8 தடவைகள் சுற்றிவிடும், ஒருமணி நேரத்தில்.

3. குருவி 4320 முறை தன் சிறகுகளை அடித்துக்கொள்ளும்; 40 கல் தொலைவு பறக்கும்.

4. "உருசி"யாவில் 10,800 கல்லெடை இரும்பு உருக்கு செய்யப்பட்டுவிடும்.

5. நம் நாட்டில் 1200 குழந்தைகள் பிறந்திருக்கும்.

6. கடல் அலைகள் 15 கற்கள் ஓடியிருக்கும்.

7. நம் நெஞ்சாங்குலை (இதயம்) 360 பதினம் குருதியை வெளியேற்றியிருக்கும்.

8. நில உலகம் கதிரவனைச் சுற்றும் பாதையில் 67,500 கல் சென்றிருக்கும்.

9. இருமல் ஒலி 240 கற்கள் சென்றிருக்கும்.

10. ஒலி 745 கல், 5 படைச்சால், 168 அடிகள் சென்றிருக்கும்.

11. ஒளி 6,29,60,000 கற்கள் சென்றிருக்கும்.

அறிவிப்பு.

அடுத்த (குரல் 4-இசை 1) இதழ் முதல் தமிழ்ச்சிட்டு வெளிநாட்டு உறுப்பினர் கட்டணம் உருபா 5/- ஆகவும், வெளிநாடு தனியிதழ் விலை 40 காசு ஆகவும் உயர்த்தப்படவிருக்கிறது என்பதை அன்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அமைச்சர்.



பெரியோர் கதை!

‘பிளேட்டோ’

-கோ. சண்முகானந்தம்

“குழந்தைகளே நாட்டின் எதிர்கால மறவர்கள். பெண்களும் கல்வியறிவு பெற்றவர்களாய்த் திகழவேண்டும். நாட்டைப்பற்றியும், மொழியைப்பற்றியும், உலகைப்பற்றியும் ஒவ்வொரு பெண்ணும் அறிந்திருத்தல் வேண்டும்” என இன்று 2,315 ஆண்டுகளுக்கு முன்பே வாழ்ந்த ஓர் அறிஞர் மொழிந்துள்ளார். அவர்தான் கிரேக்க நாட்டு அரசியல் அறிஞர்களுள் ஒருவர்; சாக்கரடீசின் மாணவர்; பிளேட்டோ என்பவர்.

பிளேட்டோ தி. மு. 397-ஆம் ஆண்டு (கி. மு. 427) பிறந்தார். தந்தை அரிசுடோன்: தாய் பெரிக்டியோன்; பிளேட்டோவின் இயற்பெயர் அரிசுடோக்ளீசு. இப்பெயர் ஏட்டளவிலேயே நின்றுவிட்டது. பிளேட்டோ இளமையில் ஆர்வத்துடன் கல்வி கற்றார். நன்கு ஆய்ந்த பின்னரே எதனையும் ஏற்கும் மனம் கொண்டிலங்கினார். தம்முடைய பதினெட்டாம் அகவையில் குதிரைப்படை மறவரானார். நாட்டுப்பற்றுடன் ஐந்தாண்டுகள் போர்ப்பணி ஆற்றினார்; பாராட்டுகள் பல பெற்றார் இருபத்துமூன்றாம் அகவையில் போர்ப்பணியினின்றும் விலகினார்.

சிறையிலிருந்த சாக்கரடீசை வெளிக்கொணர முயன்றதாக பிளேட்டோ குற்றக்கூண்டிலே நிறுத்தப்பட்டார். இருபத்தெட்டாம் அகவையில் தி. மு. 369-ஆம் ஆண்டு (கி. மு. 399) ஏதென்சை விட்டு நாடு கடத்தப்பட்டார். அந்நிகழ்ச்சி, உலகநாடுகளைச் சுற்றிக் காணவேண்டும் என்ற அவரது நீண்டநாளைய ஆவலை நிறைவாக்கிக்கொள்ள வாய்ப்பளித்தது. இத்தாலி, சிசிலி, எகிப்து, வட ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளுக்குச் சென்றார். தாம் சென்ற நாடுகளின் அரசியல் அமைப்பைத் தெரிந்து கொண்டார். சமயக்கொள்கைகளை

டும். மக்கள் பண்பாட்டையும் அறிந்தார். பன்னிரண்டு ஆண்டுகள் வெளிநாடுகளில் வாழ்ந்தார்.

சிசிலியில் கிரேக்கர்கள் வாழ்ந்த மேற்குப் பகுதிக்குச் சென்றார். அப்பகுதியை அரசாண்ட 'தையோனிசையசு' மக்களால் வெறுக்கப் பட்டான். அரசனின் அளியன் (மைத்துனன்) தியோன், பிளேட்டோ வின் நண்பனாக இருந்தான். நண்பன் தியோனின் வேண்டுகோளுக் கிணங்கி மன்னனுக்கு நல்லறிவு புகட்ட முயன்றார்; மன்னனோடு பழகினார்; வாய்ப்புக்கிடைத்தக்கால் நன்னெறிகள் பல வழங்கினார். "அறம் பிறழாமல் வாழவேண்டும். மக்களுக்காகத்தான் மன்னன்" என்பவை போன்ற அறமொழிகள் கூறினார். மன்னன்மனம் மாறி யது. நாட்டில் நற்பணிகள் பல ஆற்றினான். மாற்றம் நெடுநாள் நிலைக்கவில்லை. மன்னன் பிளேட்டோவைப் புறக்கணித்தான். பிளேட் டோவை, இசுபார்ட்டாவை வென்றவர்களிடம் ஒப்படைத்தான். அடிமையாக விற்கும்படி கட்டளையிட்டான். பிளேட்டோ எசினாத் தீவில் அடிமைச் சந்தையில் விலைகூறப்பட்டார். பிளேட்டோவின் மாணவர்களில் ஒருவனே பணம் கொடுத்து மீட்டான்; தாயகத்திற்கு அனுப்பினான். தி. மு. 357-ஆம் ஆண்டு (கி. மு. 387) தம்முடைய நாற்பதாம் அகவையில் தாயகம் வந்தார்.

தாயகம் மீண்ட பிளேட்டோ பல கலைகளையும் கற்பித்து மாணவ ருலகத்தை வலிமையுடையதாக்க விரும்பினார். தம் பெருமுயற்சியில் ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவினார். பல்கலைக்கழகத்தில் கணியக் கலை, வான இயற்கலை, மெய்யறிவுக்கலை முதலிய பல்கலைகள் கற்பிக் கப்பட்டன. நாற்பதாண்டுகள் பல்கலைக்கழகத்தில் பணியாற்றினார். மாணவர்களின் நண்பராகவும், ஆசிரியராகவும் திகழ்ந்தார் பகுத் துணரும் திறன்படைத்தவராகவும், மெய்யறிவுப் பேரறிஞராகவும் விளங்கினார்.

தம்முடைய சிசிலி நண்பர் தியோனின் அழைப்புக்கிணங்கி தி. மு. 339-ஆம் ஆண்டு (கி. மு. 369) ஐம்பத்தெட்டாம் அகவையில் இரண்டாம்முறை சிசிலிக்குச் சென்றார்; இரண்டாண்டுகள் அங்குத் தங்கினார்; மன்னன் மனத்தை நன்னெறிப்படுத்த முயன்றார்; மன்ன னின் செயலில் மாற்றம் கண்டார்; மகிழ்வெய்தினார்; மாற்றம் தொடர வில்லை. நல்ல செய்திகளைவிடத் தீயசெய்திகள்தாம் விரைவில் உரம் பெறும் என்பதற்கேற்ப, பிளேட்டோவின் நல்லுரைகளுக்கெதிராகக் கயவர்களால் தூவப்பட்ட தீயுரைகள் மன்னன் மனத்தில் படிந்தன;

பிளேட்டோவை வெறுத்தான்; நாடு கடத்துமாறு கட்டளையிட்டான். நல்லவை நிலைபெருமைக்கு வருந்தினர் பிளேட்டோ. அறுபதாம் அகவையில் நண்பர் தியோனுடன் தாயகம் திரும்பினர்.

நண்பர் தியோனைத் தமது பல்கலைக்கழகத்தின் உறுப்பினராக்கினர். தியோனின் விருப்பத்தை நிறைவுசெய்ய வேண்டித் தமது அறுபத்தைந்தாம் அகவையில் மூன்ரும் முறையும் சிசிலிக்குச் சென்று வந்தார்.

அறிஞர் பிளேட்டோவுக்கு அக்கால் அகவை எண்பது; அகவை மிகுதியால் உடல் தளர்ச்சியுற்றிருந்தது. ஓய்விலா உழைப்பினுல் உடல் களைத்திருந்தது. பிளேட்டோவின் பல்கலைக்கழக மாணவர்களுள் ஒருவருக்குத் திருமணம் நடந்தது. மாணவரின் வேண்டுகோளை ஏற்று நல்வாழ்த்துக் கூறத் திருமணத்திற்குச் சென்றிருந்தார். மணவிழா சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. பிளேட்டோ களைப்புடன் நாற்காலியில் சாய்ந்தார். நீண்ட நேரத்திற்குப்பின் உறங்கியிருந்த பிளேட்டோவை எழுப்ப முயன்றனர் மாணவர்கள்; மீளா (நீண்ட) உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டார் என்பதை உணர்ந்தனர்; கண்ணீர்விட்டனர்; கதறிக்கதறி அழுதனர். எண்ணுதிறனுடைய பிளேட்டோ தமது எண்பதாம் அகவையில் தி. மு. 317–ஆம் ஆண்டு (கி. மு. 347) மறைந்தார். பிளேட்டோவின் எதிர்பாரா மறைவு இளைஞருலகைத் தாக்கியது; அறிஞருலகுக்குப் பேரிழப்பாய் இருந்தது. பிளேட்டோவின் உடல் பல்கலைக்கழகத்திலேயே அடக்கம் செய்யப்பட்டது.

பிளேட்டோ பலகலைகளில் வல்ல பேரறிஞர்; அனைவரிடமும் அன்போடு பழகியவர்; தம்முடைய ஆசிரியரிடம் அன்பும் மதிப்பும் கொண்டவர்; ஆசிரியருடைய நெறியில் வாழ்ந்தவர்; மக்கள் நல்வாழ்வுக்கே இடையருத் தொண்டு செய்தவர்; பேரறிஞர் சாக்கரடீஸை உலகுக்கு உணர்த்தியவர்.

சொல்லால் உணர்த்த இயலாக் கருத்துகளை நூல் வடிவில் வழங்கினர். தம்முடைய அரிய கருத்துகளை ஐம்பத்தாறு நூல்களில் வடித்தார். பயாடோ என்ற தம் நூலில், ''மெய்யறிவுள்ளவன் தற்கொலை செய்துகொள்ளான்; ஆனுல் இறப்பைக் கண்டும் அஞ்சான். மாந்தனுடைய பண்பும், சிறப்பும் அவனுடைய அச்சம், கவலை, காமம், பிணி போன்றவற்ருல் அழிந்துபடுகின்றன. இவற்றினின்றும் விடு

படாவிடின் தீய விளைவுகளினின்றும் தப்ப இயலாது,'' எனக் கூறி யுள்ளார்.

தியாட்டெட்டசு என்ற நூலில் இறைவனையும், மாந்தனையும் இணைத்து ஆய்வு நடாத்தியுள்ளார். இதில், ''கடவுள் தன்மையைப் பெற விரும்பும் மாந்தன் இறைவனின் தூய்மைநிலை, மெய்யறிவு, அறம்பிறழாநிலை போன்ற தன்மைகளைக் கொள்ளவேண்டும். அவ னால்தான் நாடும், மொழியும் குமுகாயமும் நலம் காணமுடியும்,'' எனப் பகர்ந்துள்ளார். பாயட்டரசு என்ற நூலில் அறிவையும், அழ கையும் ஆய்ந்து எழுதியுள்ளார். 'அழகின் புறக்காட்சியில் மயங்கு பவன் எண்ணிறந்த இன்னல்களுக்குட்படுவான். அழகைக்கண்டு போற்றத் தெரிந்தவனே, அழகின் வளர்ச்சிக்கு வழி அமைப்பான்,'' எனக் கூறுகிறார். சட்டங்கள் என்ற அவாது நூலில், ''குழந்தை களே நாட்டின் எதிர்கால மறவர்கள். குழந்தைகள் பெற்றோர்களின் சொத்தாக எண்ணப்படும் நிலைமாறி அரசின் சொத்தாகக் காக்கப் படும் நிலை பிறக்கவேண்டும்,'' எனக் கூறியுள்ளார். குடியரசு என் னும் அவருடைய நூல் உலகப் பேரறிஞர்களால் போற்றப்படுகின்றது

எக்காலத்திற்கும், எந்நாட்டிற்கும் பொதுமையான, பிளேட் டோவின் பயன்மொழிகள் சில;

''மக்களுக்குப் புலனடக்கமும், நல்லறிவும், கல்வியும் ஊட்டுவது அரசின் தலையாய கடமையாம்.''

''தந்தை செய்த தொழிலையே மகனும் செய்யவேண்டும் என்று சொல்லும் எந்தநாடும் உலக நாடுகளுள் ஒன்றாக வாழ இயலாது. நாடே இடுகாடாகும்.''

''ஒரு நாட்டின் வாழ்வும், தாழ்வும் அந்நாட்டு இளைஞர்கள் பெறும் கல்வியின் தரத்தையே பொறுத்துள்ளது.''

''வாழ்நாள் முழுதும் இன்பமாக இருக்க விரும்புபவர் நேர்மை உடையவராய் இருக்கவேண்டும்.''

''உண்ணல், உறங்கல், நுகர்தல் ஆகியவற்றில் தன்னடக்கம் நலன் பயக்கும்.''

''பழகுவதற்குரிய நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதிலும், படிப்ப தற்குரிய நூல்களைத் தெரிந்தெடுப்பதிலும் மிகமிக விழிப்புத்தேவை.''

''எவ்வளவுதான் அறிவாற்றல் மிகுந்த இனமானாலும் அறிஞர் களுடைய நல்லுரைகள் துணையாக அமையவேண்டும்.''

தனித்தமிழ்மணிகளே! அளவோடு உண்ணப் பழகுங்கள்; அள வோடு உறங்குங்கள்; அறிஞர்களின் நல்லுரைகளுக்குச் செவி கொடுங்கள்; நல்லவர்களை நண்பர்களாகக் கொள்ளுங்கள்; நல்ல நூல் களைப் படியுங்கள்; இழிந்த நூல்களைக் கழித்தொதுக்குங்கள்; எதை யும் ஏற்கும் உள்ளவன்மை பெற்றுத்திகழுங்கள். O

உலக இலக்கிய அறிஞர்களும் காலமும்!

இங்கிலாந்து:	
செகப்பிரியர்	- 1564—1616
மிலிட்டன்	- 1608—1674
கோல்டு இசுமித்	- 1728—1774
சான் கீட்சு	- 1795—1821
செல்லி	- 1792—1822
சார்லசு டிக்கன்சு	- 1813—1863
ஆசுகார் ஒயில்டு	- 1856—1900
பெர்னாட்டுசா	- 1856—1951
சர் வால்டர் இசுகாட்	- 1771—1932
அமெரிக்கா:	
எமர்சன்	- 1863 —1882
விட்மென்	- 1819 -1892
ஓ என்றி	- 1862—1910
இத்தாலி:	
தாந்தே	- 1265—1321
செருமனி:	
கதே	- 1749—1832
காரல் மார்க்கசு	- 1818—1883
பிரான்சு:	
அலெக்சாண்டர் டுமாசு	- 1802—1870
விக்டர் யூகோ	- 1802—1852
வால்டேர்	- 1694—1778
கிரீசு:	
ஓமர்	- கி. மு. 990 வரை
அரிசுடாட்டில்	- ,, ,, 348—382
பிளாட்டோ	- ,, ,, 426—347
உருசியா:	
புசுகின்	- 1799—1837
கோகேல்	- 1809—1852
இலெர் மாண்டோல்	- 1814—1841
துர்கனிசு	- 1818—1883
டால்சுடாய்	- 1828—1910
மார்க்சிம் கார்க்கி	- 1868—
இந்தியா:	
திருவள்ளுவர்	-கி. மு. முதல் நூற்றுண்டு.
காளிதாசர்	- 375—413
கம்பர்	- 1178—1216
தாகூர்	- 1861—1914
பாரதியார்	- 1882—1921
சரோசினிதேவி	- 1879—1949

தொகுப்பு. **கதிரொளி, சேரன்மாதேவி.**

முத்துமொழிகள்

0 குழந்தையின் ஏன் என்ற கேள்வி மெய்யறிவின் திறவுகோல்
-இத்தாலியப் பழமொழி

0 பருப்பைச் சாப்பிட விரும்புகின்றவன் கொட்டையை உடைத்துத்தான் ஆகவேண்டும்.
–காத்துலாந்துப் பழமொழி.

0 மனம் கடல்போன்றது-பகுத்தறிவு கூரிய கத்திபோன்றது.
-பல்கேரியப் பழமொழி.

0 வினைகள் தாமாக நடப்பதில்லை; நாம்தான் நடக்கச் செய்ய வேண்டும்.
-பிரஞ்சுப் பழமொழி.

0 பெண்கள் இருக்குமிடத்தில் பேச்சிருக்கும். வாத்துகள் இருக்குமிடத்தில் கொக்கரிப்பு இருக்கும்.
-அயர்லாந்துப் பழமொழி.

0 இரண்டுபேர்கள் என்றுமே நிறைவடைவதில்லை: அறிவைத் தேடுகிறவனும், செல்வத்தை தேடுகிறவனும்!
-அரேபியப்பழமொழி.

0 சினம்-பழிவாங்கும் உணர்ச்சியை மணந்தால் கொடுமைக் குழந்தைதான் பிறக்கும்!
-உருசியப் பழமொழி.

0 உன்னை அளவின்றிப் புகழ்கின்றவன் ஏற்கனவே உன்னை ஏமாற்றி விட்டான்–அல்லது ஏமாற்றப் போகிறான்.
–அங்கேரியப் பழமொழி.

0 காதைப்பிடித்து இழுத்தால் தலை தன்னாலே வரும்.
–இந்தியப் பழமொழி.

0 நம்பிக்கைக்குரிய மூன்று நண்பர்கள்: மூதிய பனைவி; மூதிய நாய்; கையிலிருக்கும் பணம்!
–அமெரிக்கப் பழமொழி.

0 இன்னொருவர் வீட்டில் அவர்கள் தருவதைச் சாப்பிடு. உன்னுடைய வீட்டில் இருப்பதைச் சாப்பிடு.
–செக்கோசுலவேகியப் பழமொழி.

0 அறிவு தலையில்தான் இருக்கிறது; தாடியில் இல்லை.
–சுவீடிசுப் பழமொழி

0 உலகில் மூன்று பொருள்கள் மிகவும் மதிப்புள்ளனவாகக் கணக்கிடப்படுகின்றன. அறிவு, உணவு, நட்பு.
-பர்மியப் பழமொழி.

0 ஒற்றுமை செல்வத்தை உண்டாக்குகிறது; செல்வம் சண்டையை உண்டாக்குகிறது.
–டென்மார்க் பழமொழி.

0 கதிரவன் நுழையாத இடத்தில் மருத்துவன் நுழைகின்றான்.
– துருக்கியப் பழமொழி.

தொகுப்பு: அரியநகர் "புகழ்"

உயிருள்ள எழுத்துகள்!

-தனிமுதல்வன்.

[தமிழில் உயிருள்ள எழுத்துகளை உங்களுக்குத் தெரியுமா? தெரியாது என்றால் இப்பொழுது தெரிந்து கொள்ளுங்கள்.]

1 பறக்கும் எழுத்து எது?

2. கேட்கும் எழுத்து எது?

3. அழைக்கும் எழுத்து எது?

4. நாறும் எழுத்து எது?

5. நாடாளும் எழுத்து எது?

6. அணைக்கும் எழுத்து எது?

7. எரியும் எழுத்து எது?

8 ஏரிழுக்கும் எழுத்து எது?

9 பால்தரும் எழுத்து எது?

10. துரத்தும் எழுத்து எது?

11. துணியாலான எழுத்து எது?

12. எழுதும் எழுத்து எது?

13 உமிழும் எழுத்து எது?

14. கூர்மையான எழுத்து எது?

15. மாத எழுத்து எது?

(1) ஈ. (2) தா. (3) வா. (4) பூ. (5) கோ (அரசன்) (6) கை. (7) தீ. (8) சே. (எருது.) (9) ஆ. (பசு.) (10) போ. (11) பை. (12) மை. (13) தூ. (14) வை. (கூர்மை) (15) தை.

(விடைகள்)

பிழை திருத்தம்

தமிழ்ச்சிட்டு குரல் 3-இசை 9-இல் ஓவியர் இரவிவர்மன் வரலாற்றில், 5-ஆம் பக்கத்தில் 26-ஆம் வரியில் (இரவிவர்மனின் மனைவியார் காலமான ஆண்டு) 1831 என்றிருப்பதை 1891 எனத் திருத்திக் கொள்க.

அமைச்சர்.

சொல்லுங்கள் பார்க்கலாம்.

புதிர்: 1

ஓர் உந்துவண்டி நிலையத்தில் ஒன்பது பழைய நண்பர்கள் சந்தித்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவருடனும் கை குலுக்கிக் கொண்டனர். அவர்களிடையில் மொத்தம் எத்தனை கை குலுக்கல்கள் நேரும்?

–ந. செயராமன், நாகநல்லூர். உப்பிலியபுரம்.

புதிர்: 2

ஒரு கிணற்றின் அடியில் தவளையொன்று இருக்கின்றது. அது நீர்மட்டத்திலிருந்து கிணற்றுக்கு வெளியே வர விரும்புகின்றது. நீர்மட்டத்திற்கும் தரைமட்டத்திற்கும் இடையில் 21 அடி. அந்தத் தவளை ஒருமுறைக்கு கிணற்றுச் சுவரில் 3 அடி உயரம் எம்பிக் குதித்தால் 2 அடி கீழே வழுக்கி விடுகிறது. அப்படியானல் அந்தத் தவளை தரைக்குவர எத்தனைமுறைகள் எம்பிக் குதிக்க வேண்டும்?

–ப. இராசேந்திரன், திருவண்ணமலை.

விடைகள் கீழே:

விடைகள்: புதிர் (1) 36 கைக்குலுக்கல்கள் நேரும். புதிர் (2) 19 முறை. ஏனெனில் 19-ஆவது முறையிலேயே அது தரையில் விழுந்துவிடும். தரையில் விழுந்தபின் வழுக்குவதில்லை.

முந்தைய புதிர்களின் விடை.

குரல் 3 இசை 7-இல் வெளிவந்த புதிர்களுக்கான விடை:

புதிர் 1: தொலைபேசியின் எண்: 9537.

புதிர் 2: தூவல் விலை: 1–25 காசு; கரிக்கோல் விலை: 0-75 காசு

தனித்தமிழ்ச் சொற்பட்டி-1.

ஊர்திப் பெயர்கள்

Aeroplane-வானூர்தி
Automatic-தானியங்கு
Automobile-தானியங்கி
Auto rickshaw-உந்திழுவை
Rickshaw-ஆளிழுவை
Taxi-வாடகையுந்து
Baby Taxi-வாடகைச் சிற்றுந்து
Bus-பேருந்து, உந்து
Carriage-வண்டி
Cart-சுமைவண்டி
Chariot-தேர்
Coach-நாலுருளி
Cycle-மிதிவண்டி
Cycle Rickshaw-மிதியிழுவை
Double Decker-இருதளஉந்து, மாடியுந்து
Electric Motor-மின்னுந்தம்
Engine-பொறியம், சூழ்ச்சியம், பொறி
Hand Cart-கைவண்டி

Helicopter-திருகிறக்கை ஊர்தி
Jeep-கரட்டி, படையுந்து
Lift-தூக்கி
Lorry-சரக்குந்து, சுமையுந்து, பொதியுந்து.
Motor-உந்து
Motor Cycle-மிதியுந்து
Truck-சுமைகடத்தி, திறப்பு வண்டி
Parcel van-சிப்பக்கூண்டு (வண்டி)
Mail van-அஞ்சல் கூண்டு (வண்டி)
Passenger Carriage-போகுநர் வண்டி
Pleasure Car-மகிழுந்து, இன்னியங்கி
Scooter-குதியுந்து, பாயுந்து, கதழுந்து.
Wagon-சகடம்
Tourist Carriage-உலாவண்டி
Tram-மின்னிழுவை
Train-தொடர்வண்டி, புகை வண்டி.
Trolley-கொட்டி
Van-கூடுவண்டி, கூண்டு.

தனித்தமிழ்ச் சொற்பட்டி-2

விளையாட்டுப் பெயர்கள்

Aquatics-புனலாட்டு
Baseball-தளப்பந்து
Basket Ball-கூடைப்பந்து
Billiards-மிசைக்கோல்பந்து

Hide and Seek-கண்ணும் பூச்சி. ஒளிந்துவிளையாடு
High Jump-உயரத்தாண்டு
Hockey-வளைகோல்பந்து
Hooprace-வளையவோட்டம்

[தொடரும்]

தமிழ்ச்சிட்டு பதிவு எண். எம். 8151

பெயர்மாற்றக் கோரிக்கைப் படிவம்.

1, (அ) இப்பொழுதைய பெயர்
(ஆங்கிலத்தில், முழுவடிவில்)
(ஆ) இப்பொழுதைய பெயர்:
(தமிழில், முழுவடிவில்).

2. மாற்ற விரும்பும் பெயர்:
(முழுவடிவில், ஆங்கிலத்தில்)

3 மாற்ற விரும்பும் பெயர்:
(முழுவடிவில், தமிழில்)

4. பிறந்த இடமும், நாளும்:

5. தந்தையின் பெயர்:

6. இப்பொழுது உள்ள முகவரி:

7. நிலையான (வீட்டு) முகவரி:

இடம்:

நாள்:

கையொப்பம்

படிகள்:

(1) காவல் துறைத் துணைப் பொதுக் கண்காணிப்பாளர்
(ஒற்றுப்பகுதி) சென்னை-4
Deputy Inspector-General of Police (C. I. D.)
Madras-4

(2) எழுது. அச்சுப்பொருள் இயக்குநர். சென்னை-1.
(The Director, Stationery and Printing Madras-1.)

(3) அரசினர் தலைமைச் செயலாளர், பொதுப்பணிப்
பொறுப்புக்குழு, சென்னை-9
(The Chief Secretary to Government,
Public S. C. Madras-9)

அன்பர்கள் பலரின் வேண்டுகோளுக்கு இணங்கிப் பெயர் மாற்றக் கோரிக்கைப் படிவத்தின் போலிகைப்படி வெளியிடப்படுகிறது. நிலையாகத் தங்கள் பெயரை மாற்றிக்கொள்ள விரும்பும் அன்பர்கள் இதுபோல் மூன்று படிகள் எடுத்து, மேற்குறித்த மூவரில் ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு படி விடுத்து வைக்கவும் அத்துடன் எழுது. அச்சுப்பொருள் இயக்குநர்க்கு உருபா 17/- பணவிடைவழி விடுக்கவும். பெயர் மாற்ற இசைவு அரசிதழ்ப் பதிவேட்டின் (GAZETTE) வழி அறிவிக்கப்பெறும்.

ஆ-ர்

தென்மொழி மின் அச்சகம், கடலூர் 1.